# முதல் திருப்புத் தேர்வு - 2025

வகுப்பு : 10
காலம் : 3.00 மணி

## தமிழ்

பதிவு எண் :
மொத்த மதிப்பெண்கள் : 100

குறிப்புகள் : ❖ மாணவர்கள் தேர்வு நேரத்தை முழுமையாகப் பயன்படுத்தி விடைகளை எழுத்துப்பிழைகள் மற்றும் அடித்தல் திருத்தலின்றி தெளிவாகவும், நேர்த்தியாகவும் எழுதுதல் வேண்டும்.
❖ விடைகள் பொருள் மாறாமல் மாணவர்களது சொந்த நடையில் இருத்தல் வேண்டும்.
❖ தேர்வெழுத நீலம் மற்றும் கருப்பு நிற மையினை மட்டுமேபயன்படுத்த வேண்டும்.

### பகுதி-I

**I அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **15x1=15**

**II கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் சரியான விடையினைக் குறியீட்டுடன் சேர்த்து எழுதவும்.**

1. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை ..............................
அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

2. வெண்டைக்காய் – இச்சொல்லுக்கான தொகை வகையினை எழுதுக.
அ) பண்புத்தொகை ஆ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை
இ) உவமைத்தொகை ஈ) அன்மொழித்தொகை

3. "சிலம்பு" அடைந்திருந்த பாக்கம் எய்தி என்னும் அடியில் பாக்கம் என்பது .................
அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

4. குலசேகர ஆழ்வார் 'வித்துவக்கோட்டம்மா' என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால் சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே–
அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி ஆ) இடவழுவமைதி, மரபு வழுவமைதி
இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி ஈ) கால வழுவமைதி, இடவழுவமைதி

5. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ................ இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ............
அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன் இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்

6. Railsleepers என்பதன் சரியான பொருள் எது ?
அ) இரயிலில் உறங்கிக் கொண்டிருப்பவர்கள் ஆ) இரயில் உறக்கம்
இ) தண்டவாளக் குறுக்கு கட்டைகள் ஈ) தண்டவாளக் கம்பிகள்

7. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன ?
அ) நல்லம் உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்

8. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக மா.பொ.சி கருதியது ............
அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

9. கோப்பரகேசரி என்ற பட்டப் பெயர் கொண்ட அரசன் ....................
அ) முதலாம் இராசராசன் ஆ) இரண்டாம் இராசராசன்
இ) முதலாம் ராசேந்திரன் ஈ) இரண்டாம் ராசேந்திரன்

M.POOVARASAN M.SC B,Ed
PG Asst In Chemistry
Dharmapuri District

10. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர் .......................
அ) உதியன் ; சேரலாதன் ஆ) அதியன் ; பெருஞ்சாத்தன்
இ) பேகன் ; கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன் ; திருமுடிக்காரி

11. 'என்னுடன் ஊருக்கு வருவாயா ? என்ற வினாவிற்கு 'வராமல் இருப்பேனா' என்று கூறுவது ................
அ) ஏவல் விடை ஆ) உற்றது உரைத்தல் விடை இ) வினாஎதிர் வினாதல் விடை ஈ) இனமொழி விடை



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

பெண்ணினைப் பாகம் கொண்ட பெருந்தகைப் பரம யோகி
விண்ணிடை மொழிந்த மாற்றம் மீனவன் கேட்டு வானோர்
புண்ணிய சிறியோர் குற்றம் பொறுப்பது பெருமை அன்றோ
எண்ணிய பெரியோர்க்கு என்னா ஏத்தினான் இறைஞ்சி னானே

12. இப்பாடல் இடம் பெறும் நூல் எது ?
அ) கம்பராமாயணம் ஆ) திருவிளையாடற் புராணம் இ) சிலப்பதிகாரம் ஈ) தேம்பாவணி

13. இப்பாடலின் ஆசிரியர் பெயர் ..................
அ) பரஞ்சோதி முனிவர் ஆ) இளங்கோவடிகள் இ) கம்பர் ஈ) உமறுப்புலவர்

14. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைச் சொற்கள் யாவை ?
அ) பெண்ணினை, கொண்ட ஆ) சிறியோர், குற்றம்
இ) புண்ணிய, எண்ணிய ஈ) பெண்ணினை, பெருந்தகை

15. இப்பாடலில் மீனவன் என்று குறிப்பிடப்படும் மன்னன் யார் ?
அ) சேர மன்னன் ஆ) சோழ மன்னன் இ) பாண்டிய மன்னன் ஈ) பல்லவ மன்னன்

**பகுதி-II (பிரிவு -1)**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
**வினா எண். 21க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 4x2=8

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.
அ) வடக்கில் இருந்து வீசும் காற்று வாடை என்றழைக்கப்படுகிறது.
ஆ) குமரகுருபரரின் காலம் 17 ஆம் நூற்றாண்டு ஆகும்.

17. 'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

18. "கலைஞர், பழுமரக்கனிப் பயன் கொள்ளும் பேச்சாளர். படித்தவரைக் கவரும் ஆற்றல் கொண்ட எழுத்தாளர்" – பேராசிரியர் அன்பழகன். இக்கூற்றை அயற்கூற்றாக எழுதுக.

19. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு. இத்தொடரை இரு தொடர்களாக்குக.

20. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

21. "செயற்கை" – என முடியும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு -2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 5x2=10

22. குறிப்பைப் பயன்படுத்தி எதிர்மறையாக மாற்றுக.
அ) மறைத்துக் காட்டு ஆ) பார்த்த படம்

23. சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க.
அ) ஒரெழுத்தில் சோலை – இரண்டெழுத்தில் வனம்.
ஆ) இருக்கும்போது உருவமில்லை – இல்லாமல் உயிரினம் இல்லை.

24. பதிந்து – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

25. கலைச் சொற்கள் தருக.
அ) Patent ஆ) Symbolism

**குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**
கூட்டப்பெயர்களை எழுதுக.
அ) கல் – ஆ) ஆடு –

26. மரபுத் தொடரைப் பொருளறிந்து தொடரில் அமைந்து எழுதுக.
அ) அள்ளி இறைத்தல் ஆ) ஆறப் போடுதல்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

27. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டுத் தருக.

28. தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.

அ) கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.

ஆ) மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.

**பகுதி-III (பிரிவு-1)**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2x3=6**

29. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

திருமாலின் அடியார் பன்னிருவரில் ஒருவர் குலசேகர ஆழ்வார். சேரமன்னர் மரபில் சேரநாட்டில் உள்ள திருவஞ்சைக்களத்தில் பிறந்தவர். ராமன் மீது கொண்ட பக்தியின் காரணமாக இவர் குலசேகரப் பெருமாள் எனவும் போற்றப்படுகிறார். இவர் அருளிய திருவாய் மொழியே பெருமாள் திருமொழி எனப்படுகிறது.

அ) குலசேகரப் பெருமாள் என்று அழைக்கப்பட காரணம் யாது ?

ஆ) குலசேகரப் பெருமாள் இயற்றிய நூலின் பெயர் என்ன ?

இ) இப்பத்திக்கு பொருத்தமான தலைப்பு யாது ?

31. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

**பிரிவு-2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2x3=6**

**34வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

32. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

33. 'முதல் மழை விழுந்ததும்' என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா கவி பாடுகிறார் ?

34. அ) "சிறுதாம்பு தொடுத்த" எனத் தொடங்கும் முல்லைப்பாட்டுப் பாடல்.

**(அல்லது)**

ஆ) "நவமணி வடக்க" எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடல்.

**பிரிவு-3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2x3=6**

35 முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.
இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

36. நிரல்நிறை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37. அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள் – அலகிட்டு வாய்பாடு எழுதுக.

**பகுதி-IV**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5x5=25**

38. அ) ஆற்றுப்படுத்தல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறி இருப்பதை விளக்குக.

**(அல்லது)**

ஆ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்ந்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

39. அ) பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம் என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. திண்டுக்கல் மாவட்டம் கதவு எண் 10, பாரதி நகரைச் சேர்ந்த இளவரசன் என்பவரின் மகன் அதியன் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் கைப்பந்து விளையாட உறுப்பினராக சேர உள்ளார். அதற்கான விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.

42. அ) தொலைக்காட்சி மற்றும் திறன்பேசியில் மூழ்கி கொண்டிருப்பவர்களை நெறிப்படுத்தி நடைமுறை உலகில் செயல்பட வைக்க நீங்கள் செய்யும் முயற்சிகள் ஐந்தினை எழுதுக. **(அல்லது)**

ஆ) மொழி பெயர்க்க .

Among the five geographical divisions of the tamil country in Sangam literature, the Marutham region was fit for cultivation, as it had the most fertile lands. The property of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.

**குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

மனிதன் தனியானவன் அல்லன். அவன் சமூகக் கடலின் ஒரு துளி. அவனுக்குள்ளே சமூகம் – சமூகத்துக்குள்ளே அவன். மனிதன் எல்லாரோடும் எல்லாவற்றோடும் எவ்வளவுக்கவ்வளவு தன்னை இணைத்துக் கொள்கிறானோ அந்த அளவிற்கு அவனுடைய மகிழ்ச்சி பெருகுகிறது. இந்த மகிழ்ச்சிப்பெருக்கில் திளைக்க வேண்டும் என்றால் அனைத்தையும் ஊடுருவி செல்லும் பொது விதியான அறத்தை மனிதன் ஏற்க வேண்டும். சங்க காலத்திற்குப் பிந்தைய அறஇலக்கியங்களின் காலத்தை அறநெறிக்காலம் என்பர். அறநெறிக்கால அறங்கள் சமயம் சார்ந்தவை. ஆனால் சங்கால அறங்கள் இயல்பானவை.

1. மனிதன் எப்படிப்பட்டவன் ?
2. மனிதனுக்கு எப்போது மகிழ்ச்சி பெருகுகிறது ?
3. மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்க மனிதன் என்ன செய்ய வேண்டும் ?
4. அறநெறிக்காலம் எனப்படுவது எது ?
5. சங்கால அறங்கள் எப்படிப்பட்டவை ?

## பிரிவு-V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** **3x8=24**

43. அ) ஜெயகாந்தன் நினைவு சிறப்பிதழ், வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க.

**(அல்லது)**

ஆ) ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா ? வெறும் வணிகத்துடன் நின்று விடுமா ? இக்கருத்துகளை ஒட்டிச் செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

44. அ) புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத்தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன ?

**(அல்லது)**

ஆ) 'பாய்ச்சல்' கதையினைக் கருப்பொருள் குன்றாமல் எழுதுக.

45. அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.
முன்னுரை – கொரோனா பெருந்தொற்று – தடுப்பு நடவடிக்கைகள் – விழிப்புணர்வுச் செயல்பாடுகள் – நமது கடமைகள் – முடிவுரை.

**(அல்லது)**

ஆ) 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவம்

1. மாணவரின் பெயர் :
2. பாலினம் :
3. பிறந்த தேதி :
4. தேசிய இனம் :
5. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
6. இரத்த வகை :
7. உயரம் மற்றும் எடை :
8. வீட்டு முகவரி :
9. தொலைபேசி / அலைபேசி எண் :
10. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
11. பள்ளியின் முகவரி :
12. சேர விரும்பும் விளையாட்டு :

சேர்க்கை எண்:

மாணவரின் கையெழுத்து

தேதி :

இடம்:

பெற்றோர் / பாதுகாவலரின் கையெழுத்து

www.Padasalai.Net